மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் எப்போது தொகுதிக்குச் செல்வார் என்று கூறினால் அன்றைய தேதியிலிருந்தே, அவர் கேட்கின்ற அந்த பஸ்ஸை விடலாம். நாளை, மறுநாள் சனிக்கிழமை நீங்கள் போவதாக இருந்தால்கூட, நான் நிச்சயமாகப் பேருந்தை விடச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

துணைக் கால்நடை மருத்துவமனை

***61357—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், லந்தக்கோட்டையில் துணைக் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கோட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், லந்தக்கோட்டை கிராமத்தில் தற்போது கால்நடை கிளை நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை. அவருக்கு மாற்றாக, திரு. ஆர்.எம். பழனிசாமி.

2009 ஜூலை 2]

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்திலுள்ள லந்தக்கோட்டை என்பது, அந்தத் தொகுதியிலும் கடைசி பகுதி; திண்டுக்கல்லிலும் கடைசி பகுதி. மிகவும் வறட்சியாக, வறண்ட பூமியாக இருக்கின்ற அந்தப் பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் கால்நடைகளை நம்பியே வாழ்கின்ற காரணத்தால், அங்கே ஒரு துணைக் கால்நடை மருத்துவமனையை அமைத்துக் கொடுத்தால், அவர்களுக்கு நிச்சயமாக அது உதவியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சரவர்கள் வருங்காலத்திலாவது இதை அமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தில், 2 கால்நடை மருந்தகங்களும், 7 கால்நடை கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. லந்தக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடை அலகுகள் விவரம்: பசு இனம் 861, எருமை இனம் 526, செம்மறி ஆடு 139, வெள்ளாடு 174, மொத்தம் அலகுகள் 1800. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள டி.கூடலூர் கால்நடை மருந்தகத்தின்மூலமும், சிகிச்சை மற்றும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்மூலமும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், விதிமுறைகளின்படி கிராமத்தில் குறைந்த அளவே கால்நடைகள் உள்ளதாலும், அரசின் 2008-2009 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் புதிதாகக் கால்நடை கிளை நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு இடம்பெறாததாலும், லந்தக்கோட்டை கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியிலே, துணைக் கால்நடை மையங்களிலே, கால்நடை மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட

வேண்டியிருக்கின்ற காரணத்தினாலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் சிவகிரி பகுதி, கொடுமுடி பகுதி ஆகிய இரண்டு பகுதிகளிலும் கால்நடை மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கும் சூழ்நிலை உள்ளதா என்பதை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில், இளநிலை கால்நடை மருத்துவ உதவியாளர்கள் 444 பேர்கள், தேர்வாணையத்தின்மூலம் நேர்முகத் தேர்வு முடிந்த பிறகு நியமிக்கப்படவிருக்கிறார்கள். அதேபோல, கால்நடை பயிற்சி முடியும் நிலையிலே ஆய்வாளர்கள் 425 பேர்கள் இருக்கிறார்கள். ஆக, அவர்களெல்லாம் விரைவில் இரண்டு, மூன்று மாதங்களில் எங்கெங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெங்கெல்லாம் பணியிலே அமர்த்தப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் எல்லாத் துறைகளிலும் காலிப் பணியிடங்களெல்லாம் நிரப்பப்படும்போது, கால்நடைத் துறையிலே மட்டும் சுமார் 1,616 மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக அறிகின்றேன். அவற்றை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புவதோடு, தற்போது கிளை மருந்தகம், பார்வை நிலையம் ஆகியவற்றை அமைக்க, புதிதாகத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்தத் தடை நீக்கப்படுமா என்பதையும், ஆவரைக்குளத்தில் புதிய கிளை மருந்தகம் அமைக்கப்படுமா என்பதையும் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கு பதிலளித்ததுபோல, இளநிலை மருத்துவர்கள் 444 பேர்களும், கால்நடை ஆய்வாளர்கள் 425 பேர்களும், விரைவிலே நியமிக்கப்படவிருக்கிறார்கள். மாண்புமிகு

உறுப்பினர் சொன்ன அந்த இடங்களில் அவர்களெல்லாம் நிரப்பப்படுவார்கள். புதிதாகக் கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றால், அங்கிருக்கின்ற கால்நடைகளினுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, அதிகாரிகள் ஆய்வு செய்து விரைவிலே முடிவுகள் எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவமனையை அமைப்பதற்காக, நானும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ரெஜினால்டு, திரு. ஜாண் ஜேக்கப், திருமதி லீமா றோஸ் ஆகிய நான்கு பேரும் சேர்ந்து, ஒரு வாகனம் வாங்கிக் கொடுத்தோம். ஒரு வருடத்திற்கு முன்பு அந்த வாகனமும் வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த வாகனம் ஒரு வருடக் காலமாக டிரைவர் இல்லாமல் ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது. அதற்கான அரசாணை பிறப்பிக்கப்படவில்லை. மருந்து இல்லை; மருத்துவர் இல்லை; டிரைவர் இல்லை என்ற நிலையில் ஓராண்டுக் காலமாகக் கிடக்கிறது. இதை மூன்றாவது முறையாக இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இனியாகிலும், காலம் தாழ்த்தாமல் அந்த நடமாடும் கால்நடை மருத்துவமனையை செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெரூர் பெரியகாளிப்பாளையம் கால்நடை மருத்துவமனையில் கடந்த ஓராண்டுக் காலமாக மருத்துவர் சரிவர வருவதில்லை. அங்கே

இருக்கின்ற உதவியாளரே கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார். இதுகுறித்து அப்பகுதி மக்கள், பல்வேறு முறை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே மனுக்கள் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, கால்நடை மருத்துவர் உரிய நேரத்தில் பணியிடத்தில் வந்து அமர்ந்து, அந்தப் பணியைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 3 மாத காலத்திற்குள்ளாக 444 உதவி மருத்துவர்களும், 425-க்கு மேற்பட்ட மருத்துவ ஆய்வாளர்களும் நியமிக்கப்படவிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த இடத்திலும் அந்த ஆய்வாளரையோ அல்லது மருத்துவரையோ நியமிக்க விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.*

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூரில் கால்நடை மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது. பத்தாளப்பேட்டை, கிருஷ்ணசமுத்திரம், கூத்தப்பார், நடராஜபுரம், குமரேசபுரம் போன்ற பகுதிகளிலிருக்கின்ற கால்நடைகள் திருவெறும்பூருக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து, இடையிலே செல்கின்ற அந்த இரயில்வே லைனைக் கடந்து, அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகள் கால்நடைகளை அழைத்துச் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்த ஊர்களுக்கெல்லாம் மத்தியில் இருக்கின்ற கூத்தப்பார் கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் இந்த ஆண்டு அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற கால்நடை கிளை மருத்துவ நிலையங்களுக்கும், மருந்தகங்களுக்கும்,*

2009 ஜூலை 2]

மருத்துவமனைகளுக்கும் முதலிலே மருத்துவர்களை கலைஞர் அவர்களுடைய அரசு நியமிக்க இருக்கிறது. அதற்குப் பின்னாலே, அந்தப் பணிகளெல்லாம் நிறைவேறியதற்குப் பிறகு அடுத்த ஆண்டு கால்நடை மருத்துவமனையோ அல்லது கால்நடை கிளை நிலையமோ அமைப்பதற்கு வாய்ப்புகள் உண்டா என அதிகாரிகள் ஆய்ந்து முடிவினை எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது போடி தொகுதியானது மலைகள் சூழ்ந்த தொகுதியாகும். அந்த மலைப் பகுதியில் இருக்கக்கூடிய கிராம மக்கள் அங்கே இருக்கக்கூடிய கால்நடைகளை, போடிக்குக் கொண்டுவந்து செல்வதிலே சிரமமாக இருக்கின்றது. ஆகவே, நடமாடும் கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியிலே பிலிக்கல்பாளையம் என்ற கிராமத்திலே 1000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கிராமத்திலிருந்து 10 கிலோ மீட்டர் சுற்றளவிலே எந்தக் கால்நடை மருந்தகமோ அல்லது கிளை கால்நடை மருந்தகமோ இல்லை. எனவே, அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பிலிக்கல்பாளையம் கிராமத்திலே ஒரு கால்நடை மருந்தகத்தை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டும் என்றால், குறைந்தபட்சம் 3 ஆயிரம் பசு இனங்கள் அல்லது ஆடு, மாடுகள் இருக்க வேண்டும். மருந்தகம் அமைக்க வேண்டும் என்றால், 5 ஆயிரம் எண்ணிக்கையில் இருக்க வேண்டும், மருத்துவமனை அமைக்க வேண்டும் என்றால், 10 ஆயிரம் எண்ணிக்கையிலே இருக்க வேண்டும். அந்த எண்ணிக்கைக்குக் குறைவான இடங்களிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து கொண்டு, பார்வைக் கிளை நிலையங்கள் என்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்று எண்ணியிருக்கிறோம். அதுசம்பந்தமாக எனது மானியக் கோரிக்கை பதிலுரையிலே அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 75, மாண்புமிகு திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

75—

காவிரி நீர்

***39025—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி தொகுதி, திருக்குறுங்குடியில் சுற்றுலாப் பயணிகளுக்கு விடுதிக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குனேரி தொகுதி, திருக்குறுங்குடியில், சுற்றுலாப் பயணிகளுக்கு விடுதி கட்ட வணிக ரீதியான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.